தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2024) சென்னையில் நடைபெற்ற மியாட் மருத்துவமனையின் 25வது ஆண்டு நிறுவனர் தின விழாவில் கலந்து கொண்டு, அவ்விழாவிற்கான தபால் தலையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மியாட் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பி.வி. மோகன்தாஸ், தலைவர் திருமதி மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குநர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், தபால் துறை இயக்குநர் மேஜர் எம். மனோஜ் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசைக் கண்டித்து அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் செங்கல்பட்டில் மறியல் போராட்டம்! இரா.பொன்னுராம் தலைமையில்

செங்கல்பட்டு, பிப். 18- அனைத்து தொழிற்சங்க பொது வேலை நிறுத்தம் காரணமாக செங்கல்பட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச மாநில பேரவை செயலாளர் இரா. பொன்ராம் தலைமையில், காஞ்சி மண்டல தொ.மு.ச. பொது செயலாளர் ரவி, பெப்சி ஜே கண்ணன், சந்திரன், இ எம் அய்யனார், சசி, தாமு மற்றும் செங்கல்பட்டு பணிமனையை சேர்ந்த நிர்வாகிகள் கல்பாக்கம் பணிமனையை சேர்ந்த நிர்வாகிகள், தாம்பரம் பணிமனையை சேர்ந்த நிர்வாகிகள், மதுராந்தகம் பணிமனை சேர்ந்த நிர்வாகிகள், கோயம்பேடு பணிமனை சேர்ந்த நிர்வாகிகள் கல்பாக்கம் பணிமனை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் சிஐடியு, ஏஐடிசியு,ஐஎன்டிசி எச்எம் எஸ் , மற்றும் பல தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.2.2024) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா சந்தித்து வாழ்த்து பெற்றார்.

‘உரிமைகளை மீட்க, ஸ்டாலினின் குரல்’ இந்தியா முழுமைக்கும் ஒலிக்கிறது!

இந்தியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திருப்பெரும்புதூரில் பேச்சு!

திரும்பெரும்புதூரார், பிப்.18-

‘உரிமைகளை மீட்க, ஸ்டாலினின் குரல்’ இந்தியா முழுமைக்கும் ஒலிக்கிறது என்றும் இந்தியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும் என்றும் திருப்பெரும்புதூரில் நடைபெற்ற கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது :

தலைமைக் கழக அறிவிப்பின் படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் நேற்றுமுன்தினம் (16022024) அன்று திருப்பெரும்புதூரில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” எனும் தலைப்பில் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:

திருப்பெரும்புதூர் என்பது வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய ஒன்றாகும். சமய சீர்திருத்தவாதியும், வைணவ சீர்திருத்தவாதியும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் புரட்சியாளர் இராமானுஜர் பிறந்த ஊராகும். 2015ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெருமதிப்பிற்குரிய புரட்சியாளர் இராமானுஜரைப் பற்றி ‘மதத்தில் புரட்சி செய்த மகான்’ எனும் தலைப்பில் ஒரு மிகப்பெரிய காவியத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கதை வசனத்தில் எழுதி, ஒரு பெரியத் தொடரைத் தொலைக்காட்சிகளில் அன்று ஒளிபரப்புச் செய்தார்கள். கலைஞர் அவர்களால் ஒளிப்பரப்பு செய்யப்பட்ட அந்தத் தொடரைத் திருப்பதி தேவஸ்தானத்தால், ‘நாங்கள் தெலுங்கு மொழியில் அதைப் மாற்றி ஒளிபரப்பு செய்கிறோம்’ என்று சொல்லி அதற்கான உரிமையைப் பெற்று, இராமானுஜர் வாழ்க்கை வரலாற்றை ஆந்திராவில் ஒளிப்பரப்பினார்கள் என்பது நமக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் கிடைத்த ஓர் மகத்தான சிறப்பு. அந்த வகையில் இந்த ஊரின் பெருமையை உலகறியச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாவார்கள்.

அத்தகைய ஊரில் நானும் உரையாற்றுவது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கத் தக்கது. எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம், இந்தத் தொகுதியில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எத்தனை வாக்குகள் வித்தியாசத்தில் டி.ஆர்.பாலு வெற்றிப் பெற்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பி ட்டார்கள். ஐந்து லட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்து வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்கள் என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிவோம். இது ஒரு சாதாரண விசயம் அல்ல. 1977ஆம் ஆண்டு ராம்விலாஸ் பஸ்வான் என்பவர் பீகாரில் இருக்கிற ஹாஜ்பூர் என்ற இடத்தில் 4,24,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றார்கள். ராம்விலாஸ் பஸ்வான் இந்தியாவில் இருக்கிற மிகச்சிறந்த ஓர் பட்டியலினத் தலைவர். அவர் நான்கு லட்சத்து 24 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ஓர் கின்னஸ் சாதனையாக, உலக சாதனைகளில் ஒன்றாக அன்றைக்கு அது இடம்பெற்றது.

அதற்குப் பிறகு 1991ஆம் ஆண்டு ஆந்திராவில் இருக்கிற நந்தியால் தொகுதியில் பெரும்திப்பிற்குரிய நரசிம்மராவ் அவர்கள் ஐந்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்கள். இந்த இரண்டு சாதனைகளும் இந்திய அளவில் அன்றைக்குப் பாராட்டுக்களைப் பெற்றது.

ஆனால் 2019ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் திருப்பெரும்புதூரி லும், திண்டுக்கல்லிலும்

5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றோம்.

4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் சென்னை வடக்கு, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்குத் தொகுதிகளைப் பெற்றிருந்தோம்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு கிடைத்த வெற்றி, இதுவரை அரசியல் வரலாற்றில், இந்தியா விடுதலைப் பெற்றப் பிறகு எந்தத் தேர்தலிலும் கிடைத்திராத, அதிகப்பட்ச வாக்குகள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றி என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி!

3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 8 தொகுதிகள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 9 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 11 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் கீழான வாக்குகள் வித்தியாசம் 5 தொகுதிகள், இப்படி 39 தொகுதிகளிலும், ஒரு தொகுதியைத் தவிர மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த மாதிரியான வெற்றி இதற்கு முன்னால் எப்போதும் நாம் பெற்றதில்லை. இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி. அதைத்தான் இங்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் குறிப்பி ட்டார்கள்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெறும் வெற்றி என்பது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் சாதனைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இரண்டு மடங்காக உயர்ந்திட வேண்டும் என்கிற வகையில் இங்கே கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிற எழுச்சி, மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கிற மாற்றம், கடந்தத் தேர்தலில் பெற்றிருக்கிற வெற்றி சதவிகித்தைக் காட்டிலும் தி.மு.கழகமும், கூட்டணி இயக்கங்களும் கூடுதலான, மகத்தான வெற்றியைப் பெற இருக்கிறது என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டு ள்ளேன்.

இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்கள் 27 ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் பணியாற்றி இருக்கிறார். 12 ஆண்டுகள் ஒன்றிய அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அவர் அரசியல் வாழ்வில் அவர் ஆற்றிய அரசியல் பணிகளை நினைத்துப் பார்த்தாலே, இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் எத்தகைய செயல்வீரர் என்பதை நாம் உணர முடியும். அவர் பெட்ரோலியத் துறை அமைச்சராகவிருந்தபோது பெண்களுக்கு பெட்ரோல் நிலையங்களை 29 சதவிகிதம் அளித்த முதல் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்கள். அப்போது தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்த நிதிப் பங்கீடு 22 ஆயிரத்து 748 கோடி ரூபாயும் பல்வேறுத் திட்டங்களின் வாயிலாக கொண்டுவந்தார்.

அதைவிட இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகளின் துறை அமைச்சராகவிருந்தபோது, இப்போது பாக்கிறோமே இந்த சாலையாக இருந்தாலும், திருச்சி முதல் கன்னியாகுமரி வரை இருக்கிற சாலைகளாக இருந்தாலும், தமிழ்நாட்டில் இருக்கிற நான்கு வழி, ஆறு வழி சாலைகள் இப்படி எந்த சாலையாக இருந்தாலும், போக்குவரத்து நெரிசல் அற்ற மாநிலமாக, தமிழ்நாட்டின் அனைத்துச் சாலைகளையும் இணைக்கிற சாலைகளாக இருப்பதற்குக் காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில், அன்றைக்கு ஒன்றிய அமைச்சராக விருந்து 56,664 கோடி ரூபாயில் அவர் தீட்டிய அந்தத் திட்டங்கள்தான். ஆக, அன்றைக்கு இரண்டு முறை ஒன்றிய அமைச்சராகவிருந்து ரூ.79,412 கோடி ரூபாய் நிதியைப் பெற்று ஏராளமானத் திட்டங்களை அன்றைக்குக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்த வித்திட்டவர் டி.ஆர்.பாலு அவர்கள்.

ஐக்கிய நாட்டு சுற்றுச்சூழல் அமைப்புக்கு தலைவராக ஓர் தமிழர்!

அவர்தான் அன்றைக்கு ஐக்கிய நாடுகள் சபைக்குக்கூட உலகச் சுற்று சூழல் அமைப்புக்கு தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார். இதுவரை தமிழ் இன வரலாற்றில் ஐக்கிய நாட்டு சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஒரு தலைவராக ஓர் தமிழர் இருந்த பெருமை இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உண்டு. முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி ஆகியோரின் வழிகாட்டுதலோடு, இந்தத் தொகுதிக்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கும் அவர் கொண்டுவந்தத் திட்டங்களால் பெருமையடைந்திருக்கிறது என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிவோம்.

திருப்பெரும்புதூர், தாம்பரம், பல்லவபுரம், ஆலந்தூர், மதுரவாயல், அம்பத்தூர் இந்த ஆறுத் தொகுதிகளை உள்ளடக்கியதுதான் இந்த நாடாளுமன்றத் தொகுதியாகும். இந்த ஆறு தொகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 33 மாதங்களில் செய்த சாதனைகளைச் சொன்னால் ஒறிரண்டு இரவுகளாகும். அந்த அளவுக்கு ஏராளமானத் திட்டங்கள், அவற்றில் ஒன்றிரண்டை இங்கு குறிப்பிடு கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில், அமைச்சர் தா.மோ.அன்பரசன் , தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் கோரிக்கை வைத்து ரூ.100 கோடி ரூபாய் நிதி அனுமதியைப் பெற்று, குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் 6 அடுக்குக் கட்டிடம் 400 படுக்கைகளுடன் கூடிய, ஒரு பன்னோக்கு புதிய மருத்துவமனைக் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதபோல் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் போரூர் ஏரியை தூய்மைப்படுத்துவதற்கு ரூ.100 கோடியை நிதி அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். போரூர் ஏரி என்பது சென்னையின் நீர் ஆதாரம். அந்த ஏரிக்கு செல்லுகிற வழிகளையெல்லாம் தூய்மைப்படுத்துவதற்கு நிதியினைப் பெற்று, அந்தப் பணிகளும் நடைபெறத் தொடங்கி இருக்கின்றன.

அதேபோல் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி அவர்கள் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்களைக் கட்டுவதற்கு ரூ.120 கோடி ரூபாயில் இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி இந்த ஒரு பாராளுமன்றத் தொகுதியில் மட்டும் இத்தனைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது போல் பல்லவபுரம், ஆலந்தூர், அம்பத்தூர், தாம்பரம் போன்ற சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணிகள் ஏராளமானவற்றைக் குறிப்பிடலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள், 2009ஆம் ஆண்டு முத்தமிழறி ஞர் கலைஞர் தலைமையில் மதுரவாயல் முதல் துறைமுகம் வரை 17.5 கி.மீ மேம்பாலமாகவும், 1.5 கி.மீ. தரைப்பாலமாகவும், 19 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,655 கோடி ரூபாய் செலவில் பறக்கும் பாலம் அமைப்பதற்கு அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டினார்கள். அப்பணி 25 சதவிகிதம் நிறைவடைந்த நிலையில், ரூ.500 கோடி செலவில் தூண்கள் எல்லாம் வடிவமைக்கப்பட்ட நிலையில் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்து அந்தப் பணிகளை நிறுத்திவிட்டார்கள். அதற்குச் சொன்ன காரணம் ‘நீர்நிலையில் பாலம் கட்டப்படுகிறது, அதனால் நிறுத்தி விட்டேன்’ என்று சொன்னார்கள்.

36 லட்சத்து 90 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு!

ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. இந்த பாலம் கட்டிமுடிக்கப்பட்டால், இந்தியாவிலேயே மிக நீண்டதொரு பாலம் என்ற பெருமை கலைஞருக்கு வந்துவிடக்கூடாது என்கிற தீயகாரணத்தால்தான் அன்றைக்கு ஜெயலலிதா அந்த பாலம் கட்டும் பணியை நிறுத்தி விட்டார். ரூ.1,655 கோடி ரூபாயில் கட்ட வேண்டிய பணியை இப்போது ரூ.5,611.70 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஜெயலலிதாவால் நிறுத்த ப்பட்டப் பணி, மதுரவாயல் முதல் துறைமுகம் வரை ஒரு பாலம் கட்டினால் போக்குவரத்திற்கு ஒரு விடியல் கிடைக்கும் என்ற நிலையில் அன்றைக்கு தி.மு. கழகம் மக்கள் எல்லாம் ஒன்று கூடி போராட்டம் நடத்தினர். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தளபதி அவர்கள், சமூக வலைதளத்தில் ஓர் பதிவினை செய்தார்கள். அதில், “தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தால், ஒன்றிய அரசோடு சேர்ந்து, இந்த பறக்கும் பாலம் கட்டும் பணியினை செய்து முடிப்போம்” என்று பதிவிட்டார்கள். அதை சொன்னதற்கிணங்க, பணியினை தொடங்கியுள்ளார்கள். ஓரடுக்குப் பாலத்தைதானே ஜெயலலிதா தடைசெய்தார். இன்றைக்கு ஈரடுக்கு பாலத்தைக் கட்டிகாட்டுகிறேன் என்று சொல்லி அதை செய்துகொண்டிருக்கிறார்.

போரூர் மேம்பாலம், கத்திப்பாரா மேம்பாலம், மீனம்பாக்கம் மேம்பாலம், பாடி மேம்பாலம், கோயம்பேடு மேம்பாலம் போன்றவை எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களின் சாதனைச் சரித்திரத்தில் இடம்பெற்றவை. இந்த சாதனைகளால் சென்னையின் போக்குவரத்திற்கு ஒரு மிகப் பெரிய விடியலைத் தந்திருக்கிறது.

டி.ஆர்.பாலு அவர்கள் தமிழகத்திற்கு எத்தகைய சேவைகளையெல்லாம் செய்திருக்கிறார் என்பதையெல்லாம், இந்த நாடாளுமன்றத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற வகையில் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறவர்கள் எல்லாம் பெருமைக்கொள்ளக்கூடிய விஷயம். டி.ஆர்.பாலு அவர்கள் 2019ஆம் ஆண்டில் வெற்றிபெறுவதற்கு நாம் காரணமாக இருந்ததால் இத்தனைப் பணிகள் ஏற்கெனவே நடைபெற்று முடிந்தும் இருக்கிறது, இவ்வளவு பணிகள் நடைபெற்றுக்கொண்டும் இருக்கிறது என்கிற அந்தப் பெருமை நாம் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்கிற வகையில் தான் இந்த செய்திகளையெல்லாம் நான் உங்கள் முன் நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்கள் எத்தகையத் திட்டங்களை யெல்லாம் கொண்டுவருகிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த திருப்பெரும்புதூர் தொகுதிக்கு உலக முதலீட்டார்கள் மாநாட்டின் மூலம் இரண்டு திட்டங்கள் கிடைத்திருக்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் உலக முதலீ ட்டாளர் மாநாட்டை நடத்தி, 6 லட்சத்து 44 ஆயிரம் கோடி ரூபாயை இன்றைக்கு முதலீடாகப் பெற்றிருக்கிறார்கள். இதன்மூலம் 36 லட்சத்து 90 ஆயிரம் தமிழக இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்க இருக்கிறது. இந்தத் தொகுதியில் சாம்சங் என்கிற நிறுவனம் ‘கம்பரசர்’ என்கிற தொழிற்சாலைக்கு ரூ.1,588 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருக்கிறது.

அதேபோல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்த போது ஹுண்டாய், செயின் கோவின் போன்ற பல்வேறு நிறுவனங்கள் திருப்பெரும்பு தூர் தொகுதிக்கு ஏராளமானத் திட்டங்களைக் கொண்டு வந்து பெருமைப்படுத்தினார்கள். தற்போது ஹுண்டாய் நிறுவனம் விரிவாக்கத்திற்கு ரூ.6,180 கோடி ரூபாய் செலவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் திருபெரும்புதூர் தொகுதிக்கு எட்டாயிரம் கோடி அளவில் பல்வேறு நிறுவனங்கள் மூலம் திட்டங்க ளைக் வருவதற்கு வித்திட்டிருக்கிறார்கள்.

மகளிருக்கு விடியல் பயணம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை அரசியல் அனுபவம் மற்றும் முதிர்ச்சியின் காரணமாக மீ.அ.வைத்தியலி ங்கம் ஒரு குடும்பம் 6 ஆயிரம் ரூபாய் பெற்றிருப்பதன் மூலம் என்னென்ன பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டார்கள்.

மகளிர்க்கு விடியல் பயணம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு இலவச பேருந்து பயணம் கொண்டு வருவதற்கு முன்பு பொதுப் போக்குவரத்து பயணம் என்பது 40 சதவிகிதம் இருந்தது. மகளிருக்கு இலவச பயணம் என்று அறிவித்தபிறகு அது 65 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. நேற்றைக்குக் கூட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் இது வரை ரூ.415 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதையும், அதற்காக ரூ.2,500 கோடி ரூபாயும் மானியம் வழங்கப்பட்டுள்ளதையும் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள்.

சென்னை மாநகரத் தலைவராக இருந்த சர்.பிட்டி தியாகராயர் அவர்கள் ஏழை, எளிய குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிறபோது அவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அவருக்குப் பிறகு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை விரி வாக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அத்திட்டத்தை சத்துணவுத் திட்டமாக மாற்றினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாரத்திற்கு 5 முட்டைகளும், முட்டைகள் சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழங்கள் என்கிற வகையில் சத்துணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் உலகிலேயே இல்லாத அளவிற்கு காலை உணவுத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 16 லட்சம் மாணவர்கள் பயனடைகிற வகையில், 31,008 தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.500 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

இதுபோல் எண்ணற்றத் திட்டங்கள், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, இளங்கலைப் படிக்கும் அரசு மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை அது 3 ஆண்டுகளில் ரூ.36 ஆயிரமும், பொறியியல் பயிலும் மாணவிகளுக்கு 4 ஆண்டுகளில் 48 ஆயிரமும், மருத்துவம் படிக்கும் மாணவிகளுக்கு 5 ஆண்டுகளில் 60 ஆயிரமும், தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு 24 ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,81,075 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகையும், ‘நான் முதல்வன் திட்டம்’ - இளைஞர்கள் திறன் பயிற்சி பெறுகிறத் திட்டம் தொடங்கும் போது இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 10 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள் என்று அரசு உயரதிகாரிகள் குறிப்பிட்டார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்திருப்பதாக நேற்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அதேப்போல் மருத்துவத்துறையில் 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் சாமணப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் என்றதொரு மகத்தானத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நீரிழிவு, இரத்த அழுத்தம், பிசியோதெரபி, பாலியேட்டிவ் கேர், டயாலிசிஸ் போன்றவற்றிற்கு இதுவரை 1 கோடியே 70 ஆயிரம் நோயாளிகளுக்கு வீடுகளுக்கேத் தேடிச் சென்று கிசிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலகிலேயே ஒரு மகத்தானத் திட்டமாகும். கியூபா போன்ற நாடுகள் மருத்துவத்தில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தாலும், மக்கள் மருத்துவமனைக்குப் போனால்தான் மருத்துவம். ஆனால் மருத்துவர்களே வீடுகளுக்குத் தேடி சென்று மருத்துவம் பார்ப்பது உலகிலேயே தமிழ்நாட்டில் தான். கடந்த மாதம் திருவள்ளூர் மாவட்டத்தில், அந்தத் திட்டத்தின் விரிவாக்க மாக தொழிற்சாலைகளில் பணிபுரிகிறவர்களுக்கும் அத்திட்டம் பயன்படவேண்டுமென்பதால், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம், தொழிற்சாலைகளுக்கே போய் மருத்துவம் பார்க்கப்படுகிறது.

‘இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48’ திட்டத்தை மேல்மருவத்தூரில் 2021ஆம் ஆண்டு டிச.18 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் அதிக விபத்துகள் நடக்கிற இடங்கள் என்று 500 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 500 இடங்களில் இருக்கிற 618 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. விபத்து நடப்பது கிராமச் சாலையாக அல்லது நகர சாலையாக, தேசிய நெடுஞ்சாலையில் எங்கு விபத்து நடந்திருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், மனிதாபிமாண்பின் அடிப்படையில் உடனடியாக மருத்துவமனைகளில் சேர்த்தால், சேர்த்தவருக்கு ரூ.5000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் விபத்தால் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் சேர்த்தால் காவல்துறையின் விசா ரணைக்கு உட்பட வேண்டியிருக்கும். ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கும் ஊக்கத்தொகை தந்துள்ளார்கள். இதன்மூலம் 2 லட்சத்து 21 ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது. அதேபோல் இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம், மக்களைத் தேடி ஆய்வகத் திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று கல்வித்துறையில் இல்லம் தேடி கல்வி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் அன்பழக னார் பெயரில் ஏழாயிரம் பள்ளிக்கூடங்கள் கட்டுகிற, மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்ததைப் போன்றே 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஒரு லட்சம் பேருக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி ஏராளமானத் திட்டங்களை செயல்படுத்திக் கொடிண்ருக்கிறார்.

இந்தத் திட்டங்களை யெல்லாம், திட்டங்களின் விவரமறிந்து, தமிழ்நாட்டின் திட்டங்களை குறிப்பெடுத்து, அவற்றை தங்களின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டு அவர்கள் வடநாட்டில் வெற்றி பெறுகிறார்கள். இவற்றை பல்வேறு மாநிலங்களில் பார்த்துக் கொண்டுள்ளோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டக்கூடியத் தலைவராக பரிணமித்துக்கொண்டிருக்கிறார். ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் வழி நடப்பதுதான் நமது எதிர்காலம் என்று சொல்லுமளவுக்கு இந்தியா ஒன்றிணைந்து நிற்கிறது. நிச்சயம், இந்தியா கூட்டணி வாகை கூட இருக்கிறது.

சமீபத்தில் ஓர் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த செய்தி அதிர்ச்சிஅளிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது, 2014இல் மோடி தலைமையிலான ஆட்சி அமைவதற்கு முன்பு வரை கார்ப்பரேட் நிறுவனங்களிலிருந்து பெறப்படும் வரி வருவாய் ஆண்டிற்கு 33 சதவிகிதமாக இருந்தது. ஆட்சி அமைந்தபிறகு அவ்வருவாய் 22 சதவிகிதமாக குறைந்திருக்கி றது. இதன்மூலம் ஆண்டிற்கு கார்ப்பரேட் நிறுவனங்களிட மிருந்து பெறப்படும் வரி வருவாய் 11 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. 11 சதவிகிதம் தானே என்று குறைவாக மதிப்பிடலாம். ஆனால் 1 சதவிகிதம் என்பது 50 ஆயிரம் கோடி வருமானமாகும். 11 சதவிகிதம் என்பது 5 லட்சத்து 60 ஆயிரம் கோடி, ஓராண்டிற்கு, ஒவ்வொரு ஆண்டும் கார்ப்ரேட்களிடமிருந்து கிடைக்கிற வரி 11 சதவிகிதம் நமக்கு கிடைக்காமல் போயிருக்கிறதென்ற